உ

கணபதி துணை.

சிவானந்தபோதம்.

இஃது,

ஆ-எதிராஜமுதலியாரவர்களது

சென்னை-சூளை:

“பிரின்ஸ் ஆவ் வேல்ஸ்” அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904-வரு.

சிவமயம்.

சிவானந்தபோதம்.

காப்பு.

வெண்பா.

சிவானந்த போதகமாஞ் சித்திமுத்திதந்து
பவானந்த மானவினை பாழாம் - நவானந்த
ஈசனே தானரு மென்வடிவுத் தாளிணையைப்
பாசமுடன் றொழுவார் பார். (க)

தியாகரருள் போதஞ் சிவசுந்தரன்சொல்
தயாபரியென் றுய்வடிவந் தானும் - செயாவெனவே
பொய்யாவிநாயகனும் பொற்குருவாஞ் சண்முகனும்
அய்யாவு மென்னுள்ளே யாம். (உ)

முத்திபெறு மென்னெஞ்சு மூர்க்கருடனேயிணங்கி
சித்தந்ததும்பிச் சிதறுமன் - முத்தனும்
பட்டினத்தார் சாக்ஷிப் பகுத்தறித லிந்நூலைத்
தொட்டவர்க்கு முண்டாஞ் சுகம். (ங)

பணியறுத்த லாகப் பரபோகங்கொண்டு
துணிவுறுத்த நெஞ்சுக்குச் சொல்லின் - அணியாய்
படபடென்னும் நெஞ்சம் பகருசிவானந்தத்
திடமுறுவார் தானே சிவம். (ச)

சிங்காதனமுடைய செல்வவடியார்கள்
தங்காற்சிரமேற் றரித்திட்டேன் - பொன்கால்
ஏற்றிப்புகழ்ந்தன்பா லிந்நூலென் புன்கவியால்
சாற்றத் துணிந்தேன் சரண். (ரு)

நூற்பயன்.

விருத்தம்.

அறிவதனை மனங்கேட்கச் சிவானந்த போதத்தை யறியநன்ருய், நெறியுடைய முத்தர்கள்தன் திருவடியிற் பணியவருள் நிலைக்கக்காட்டிக், குறியுடனே யனுபவத்து வழியடைந்து கதிபெறவே கூறவென்றும், பிரிவறவே வாழ்ந்துசிவப் பேரானந்தம்பெருகப் பேசுமிந்நூல். (சு)

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்துதி.

நிறைந்தபரி பூரணமாய் நிற்குணமாய் நிர்மலமாய் நித்தனாகித், துறந்தமனத் துடையோர்க்குந் துரியனுமா யதீதனுமாய்ச் சோதியாகிக், கறந்தமுலைப் பாலாகிப் பாலினுள்ள ருசிகாட்டுங் கர்த்தனாகிச், சிறந்தகுரு மாணிக்க சுவாமிகளை யெம்முளத்திற் ெறாழுதல்செய்வாம். (எ)

சமயாசாரியர் மூவர்துதி.

இசைகுருகிப் பரந்தானே யெழுந்தருளி வேண்டிய தோரின்பந்தந்து, இசைக்குளவா யெதிர்த்தவனை மதிக்

திடாச் சிவசமய மேலாய்ச்செய்து, இசைக்குளவோர் புகழ்ந்தேத்தச் சிவாலயத்திற் றேவாரஞ் சிறக்கவோதிப், பசைக்கருதி யருள்பெருகு மூவரிணை மலரடியிற் பணிகின்றேனே. (அ)

பஜவண்ணர் அல்லமாப்பிரபுதுதி.

பத்திநிலை தவறாமற் கிருபையுமே வழுவாமற் பாரின்மீதே, யுத்திசிவ கணேசருக்குப் போதமுற்றுப் பூசைசெய் துகந்துஞானத், தத்துவமே யுணர்ந்துசிவந் தானுகும் பஜவண்ணர் சாக்ஷாத்கார, முத்திதரு மல்லமாப் பிரபீச ரிருவர்தாள் முடிகொள்வாமே. (சூ)

மருத்துமலைதேசிகர்துதி.

பன்னுமறை சாத்திரங்க ளாகமங்கள் விரிந்தநாற் பதத்திற்சென்றே, யுன்னுகின்ற மனத்தாலே பிறப்பிறப்பாம் நோய்பலவற் றுற்றிடாமற், பொன்னுடைய வம்பலவர் கழற்பணியச் சிந்தையற்றுப் பூஜைசெய்ய, வென்னதென்றே யெனையாண்ட மருத்துமலைத் தேசிகன்றாளிறைஞ்சுவோமே. (கo)

நூல்.

அறிவுக்கும் மனதுக்கும் * வாக்குவாதம்.

அறிவுகூறுதல்.

ஆனநெஞ்சமே யிமைப்பொழுதாகிலு மலைவறுத் திருந்தாயோ, போனநாளிலே நடந்ததுமிருந்ததும் புது மைகளறியாயோ, ஈனமாகிய கவலையைநீக்கியைம் பொறி யினிலிணங்காமல், தானமொத்துநான் சொன்மொழிகே ட்டுநீ சரியென்றுமகிழ்வாயே. (க)

மனங்கேட்குதல்.

(அவதாரிகை.) ஏதேது விபரீதமாக இருக்கிறது, இமைப் பொழுதாகிலும் பிரியாமலிருந்த நீ இப்போதென்னை அன்னியமா கக்குறித்து சொற்படி கேட்கச்சொன்னதும் சந்தோடமாயிற்று; ஆகிலும் உதவியான காரியமாக விருப்பிற் கேட்கவேண்டுந்தானே, ஆதலாற் சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

முத்திபெறு மழகான நெஞ்சகமே பணியறுத்தென் மொழியைக்கேணீ, சத்துசித் தானந்த பராபரமே கெதி யென்றுஞ் சார்ந்திடாமன், முத்தர்களு மோதிவைத்த நூலதனை யாராய்ந்து முனைந்திடாமற், பத்திநிலை நில்லா மற் சிந்தனையு மோயாமற் பார்ப்பதென்னே. (உ)

---

* பாக்கள் - அறிவுசொல்வது, வசனங்கள் - மனதுசொல்வது.

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆயினியாதோ பரத்தைச் சாரவில்லை யெனவும், நூலினுட்பொருளை யறிந்து முனைகொள்ளவில்லையெனவும், பத்தி நிலையி னிற்கவில்லையெனவும், சிந்தனைகளை யறுக்கவில்லையென வும், சொல்கின்றனவற்றை எக்காலத்தினு மியானறியாதவனாக விருக்கிறேன், இஃதந்தரங்கப்பாஷையாக விருக்கின்றது. மாடு, மக்கள், பெண்டீர், சுற்றம், வாணாள் முதலியனவே பொருளென் றுன்னியிருந்த வெனக்கிப்போது திடமொன்று நான்குவகையிற் சிந்திக்கச்சொன்னீர். ஸ்பஷ்டமாகப் புலப்படுமாறு புகல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

மாடுமக்களுஞ் சுற்றமும்பெண்டிரு மாளிகையுடன் வாழ்வும், நாடுராச்சிய மாண்டிடும்புகழ்ச்சியு நம்மதென் றேதேகத்தி, னூடுசென்றுநீ யெனதுடலியானென வுழ ன்றலுத் திடுநெஞ்சே, வீடுவிட்டுயி ரேகிடும்போதினில் வினைவழி நுழைந்தாயே. (௯)

மனங்கேட்குதல்.

(அ-கை.) தேகத்தினுள்ளே புகுந்து மாடு, மக்கள், சுற்றம், பெண்டீர், உயர்வாழ்வு, தேசாதிபத்தியப்புகழ்ச்சி முதலியவை சத மென்றும், தேகம் நான் எனது என்று பாராட்டி உழலுகிறாயென் றும்; முடிவுகாலத்தில் வினைவழியிலே உயிரை நுழைக்கிறாயென் றுஞ் சொல்லுகிறாய். நீ இதுகாறும்கூட இருந்தையா இல்லையா? இதுகாறும் யாதும் புகலாதிருந்தவாறென்னை? இப்போது இங்ங னஞ் சொல்லுதற்குக் காரணமென்னை? என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

கேணீநெஞ்சமே யுன்னிடவயத்திலே கிடந்துலேந்தன மின்னுள், வீணிலேபல சென்னமுமெடுத்ததின் மெலிந்திடு மப்போது, ஊணிலேனெனே யானறியாமலே யுத்தமர் நோக்கத்தாற், காணுமிப்படி மானிடதேகமுங் கண்டது மறிவாயே. (ச)

மனங்கேட்குதல்.

(அ-கை) அனேகந் திரேகத்திற்பிறந்து பிறந்திருக்கின்றதாகவுஞ் சொன்னீர், அவற்று ளிம்மானிடதிரேக மருமையாகப் பெரியோர் கிருபாநோக்கத்தாற் கிடைத்ததாகவுஞ் சொன்னீர், அது தெரியும்படிக்குச் சொல்லுமென மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

நாலுவகை யோனியிலு மெழுவகையின் ருேற்றத்துநளினமாக, மேலுகந்த மானிடந்தா னெடுப்பதுவே யருமையாய் மெய்யனுகி,பாலுபோன் மனமுடைத்தாய் புண்ணியமே மிகுந்துபவங் கீழாய்த்தள்ளி, நாலுணர்வ தருமைநெஞ்சே யிருவினையி லொருவினையை நொறுக்கித்தானே. (ரு)

மனங்கேட்குதல்.

(அ-கை) ஆனல் மானிடதேக மெடுப்பதருமையென்று சொன்னீர், அதிலும் மெய்யனுகிக் கள்ளமற்று பாவம்போக்கி புண்ணிய மிகுந்து நூலுணர்வதருமை யென்றுங் காட்டுகின்றீர். அப்படியா

னல் மானிடதேகத்திலேதானே பலவிதமாயருமையாகிய தேகமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுமுண்டு, மனிதரிலு நீர்வாழுஞ் சாதியுண்டு அநேக குல மனிதருண்டு, மனிதரிலு மனிதருண்டு வானவருமனிதராய் வருவதுண்டு, மனிதரிலே பிறப்பறுக்க வந்ததேயருமையென வகுத்தார் முன்னோர். (௬)

மனங்கேட்குதல்.

(அ-கை) ஆனல் தேக மெடுப்பது எவ்விதம்? வினையென்பது ஒன்றோ இரண்டோ? இதில் சகாயமான வினையெது? வினைவழியாய்த் தேகமெடுக்கிறது யாராலேயென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

எழுவகையின் றோற்றமாய்க் கடந்தோறும் பலவிதமா யின்பமுற்றே, பழுதறவே தேகம்வரும் பேய்மனமே நீசெய்த பண்பினலே, உழிதருமிக் காலத்து மொழியாம விருவினையா லுகந்துநிற்கும், கழிதருமிவ் விருவினையிலொருவினையை நோக்குவது கடினந்தானே. (எ)

மனங்கேட்குதல்.

(அ-கை) ஆனல் என்னலே வினையுண்டாகிறதென்றும், வினையினலே தேகமெடுக்கிறதென்றும் சொன்னீர்; வினைவழியாய்ப் பல

யோனிதோறும் எப்படிப் புகுந்து ஜநநமரண முண்டாகிறதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

மனவாக்குக் காயத்தான் மருவுஞ்செய்கை
மலர்மணம்போ லுறுஜன்ம மயக்கத்தாலே
இனமாக்கும் பிறவியினி லிழுத்துக்கொண்டே
யெத்தனையோ ஜன்மத்தி லிறக்கச்செய்யும்
தனவாக்காய் பிரம்மாவுஞ் சிருஷ்டிசெய்ய
தான்றானே வளர்ந்திந்தத் தரணிமீதே
இனமாக்கு வெம்பாசந் தன்னிற்சிக்கி
யிறந்தார்கள் பிறந்தார்க ளின்னம்நெஞ்சே. (அ)

மனங்கேட்டதல்.

(அ-கை.) ஆனல் பிறந்தாலு மிறந்தாலும் வேதாகம சாத்திரச் சொற்படி நடந்தால், தேவேந்திரபதவி பிரம்மபட்ட முதலானது மடையலாமென்று சொல்லுகிறார்களே, அதுசுகமல்லவோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

முந்தஜன்மமாம் புண்ணிய மிகுந்திடின் முக்கியமுண்டாகும், பிந்தஜன்மமாம் பாவமேமிகுந்திடிற் பெரியதோர் துயராகும், அந்தரெண்டையு மறுத்திடி லொளிதரு மரன்கழற் றுணையாகும், பந்தமானதோர் புராணங்கள்வேதங்கள் படைத்ததையறிவாயே. (கூ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் மும்மூர்த்திகள் பட்டமாயிருந்தாலும், தேவேந்திரப் புகழ்ச்சி பெற்றாலும், பின்னும் பூலோகத்திலே பிறப்பதுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வாழுமாலய னுருத்திரனிந்திரன் வானவரானாலும்,
சூழுமாயுகம் பிரளயந்தன்னிலுஞ் சுகமுடன் வாழ்ந்தாலும், தாழுமானதொல் லுலகில்வந்துறுவர்கள் தரணியோர் புகழ்ந்தேற்ற, வீழும்நெஞ்சமே யரனடிசேர்ந்திடில் வினைக்குழுவிழுந்தாயே. (க0)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் வேதாகமபுராண சாஸ்திரங்களுண்டாக்கி வைத்ததார்? அவற்றாலே என்னபிரயோசனம் என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

நரஜன்மத்தை யெடுத்தும்பவத்தினில் நழுகிடாதிவ் வண்ணமே, திரமதாகவே யீசனுத்தரவினுற் செய்பவர் புண்ணியமென்றே, வரமுடைத்தநல் வியாசருஞ் செய்தனர் வழங்கிடுமதனாலே, பரவடியையுறு முத்தர்களிருவினைப் பற்றறப்பார்த்தாரே. (கக)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் ஒருவர் செய்கிற பாவபுண்ணிய மொருவருக்கு உண்டென்கிறது எவ்விதமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

ஒருவர்செய்த பாவபுண் ணியமொருவர்க்
குண்டென்று சொல்லுகின்ற வூமைநெஞ்சே
தருகுமவ ரவருயிர்க்குத் துணையார்சொல்வாய்
தந்தைதாய்ப் பெண்டுபிள்ளை துணையுமாமோ
வருகுமந்த வியாதிகளும் வினைதானல்லோ
மக்கள்பெண்டு தந்தைதாய் வாங்கிக்கொண்டு
திருகுமவர் பின்னொருவர்க் கீந்ததுண்டோ
திருஷ்டாந்தங் கண்டுநீ தெளிந்திடாயே. (௧௨)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அப்படியானல் புராணங்களிலே ஒருவர்செய்த பாவ புண்ணியம் மற்றொருவருக்குண்டென்று பொய் சொல்லவேண்டிய தென்னவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

பாசபந்த மானதொரு மூடர்க்கிந்தப்
பற்றுதலை வையாட்டால் நம்பமாட்டார்
ஆசைகொண்டு செய்யார்கள் விகாதஞ்செய்வார்
அதனலே பொருத்தம்வைத்துச் சொன்னதல்லால்
நேசமிது போலவே பகைத்தார்பாரு
நீங்கினல் வேறுகெதி நிலத்தோர்க்குண்டோ
மோசமிது நம்பாதே நெஞ்சேகேளு
முனைந்தவர்க்குச் செய்தபலன் முடியுந்தானே. ()

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் ஒருவர்க்கொருவர் நன்மை தின்மை கூட்டு றவில்லையே; அப்படியிருக்க, ஒருகுடும்பத்திலே பத்துஜனங்களில் தாஙகள் ஒன்றுக்கொன்று பிறவற்றிற் கிடங்கொடாமலும் உள்ளுக் குள்ளே அனேக விகற்பத்தோடு மனம் பேதித்து வாழ்கிறார்களே, எந்தப் பற்றுதலைக்கொண்டு ஒன்றுபோலிருக்கிறார்களென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

பெண்ணாலும் பொன்னாலும் பூமியாலும்
பெருக்கவே யிச்சைகொண் டொன்றுக்கொன்று
தின்னார்க ளூறவாடிச் செத்தாரல்லாற்
சேர்ந்துமன மொன்றாகிச் சிறந்திட்டாரோ
கண்ணாலே பார்த்துநீ சுகங்கண்டாயே
கவலைக்கே யாளாகிக் கருத்திழந்துப்
புண்ணாகிப் பிறப்பிறப்பிற் புகுந்திட்டாய்நீ
பூமலர்த்தா டுணையென்று புகழ்வாய்நெஞ்சே. (கச)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் வினைவழியே யுயிரித்தேகத்தை விட்டு இனி மேற் றேகமெடுக்கிற தெந்ததேகமோ வதைத்தெரியும்படியும், இத் தேகத்தை விடும்போது யாதொருகுறிகளுண்டோ வென்றும் மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வெண்பா.

தேகந்தனிற்பொறியுஞ் சிராம்புலன்கரணம்
ஆகந்துறக்குமப்போ தந்நேரம் - போகமது

எவ்விடத்துச்சென்றதோ யேற்குங்கடவடிவம்
அவ்விடத்தைநன்று யறி. (கரு)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் வினைப்பயனு மறிந்தேன், இந்த அருமையாகிய மானிடதேகம் வந்ததுமறிந்தேன், வேதாகமபுராண சாத்திரங்களது கட்டுப்பாடு மறிந்தேன், பிறப்பிறப்பென்கிற விவரமுமறிந்தேன், வினைவழியே தேகமெடுக்கிற தென்னும் விவரத்தையும் என்னால் வினையுண்டாகிற தென்பதையு மறிந்தேன், ஒருவர்க்கொருவர் நன்மை, தீமை, உதவியில்லை யென்பது மறிந்தேன், ஒரு குடும்பத்திலே பலஜனங்க ளொன்றுபோற் கூடி வாழ்கிற பந்தத்தையு மறிந்தேன், எல்லாமுள்ளபடி ஒத்துக்கொண்டேன், அரனது திருவடிநிழலையடைகிறதே சுகமென் றாசைகொண்டேன், இத்தனைநாளாக வென்னை நம்பியிருந்த குடும்பத்தாரெல்லாம் இளந்தைகளாக விருக்கிறபடியினாலே அவர்களை விட்டுவிட்டால் வேறுகெதியின்றி அவர்கள் வருந்துவ ராதலா லவர்கள் பக்குவகாலபரியந்த மிருந்து காக்கவேண்டு மென்று பரிதாபப்படுகின்றமையா லதற்கொரு உபாயஞ் சொல்கவென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

விருத்தம்.

அவரெல்லா மிருக்கவிப்போ துன்னையேமனழைத்துவிடி லியாதுசெய்வா யழகுநெஞ்சே
யிவர்களுக்குப் பிழைக்கும்வகை திரும்பிவந்தே
யேதுவாய் முடிப்பதுண்டோ வெண்ணிப்பாரு

தவறிநீ கடம்விட்டுப் போகும்போது
  தான்கூட மாண்டாரோ பிழைப்பில்லாமல்
அவரவர்க்குச் சிவன்றுணையென் றெண்ணிடாம
  லையத்தா லிப்படியே யலைவுற்றாயே. (கசு)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனாலறியலானேன், இனிமேற் பாசபந்தத்தில் வீழ்வேனோ? திருவடியை யடையாமலிருப்பேனோ? ஆனாலின்னுங் கொஞ்சகாலம் பொறுத்துத்தான் திருவடியை யடைவதற் கேதுபண்ணிக்கொள்ளக் கூடாதோ? இப்போது தானே துணிந்துகொள்ள வேணுமோவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

காயமன வாக்குத்தான் றளர்ந்தபோது
  கருத்தழிந்தே யுறுதியற்றுப் பாசமீறி
நேயமந்த மாய்கையினிற் பற்றிக்கொண்டால்
  நெற்றிக்கண் படைத்தவர்தா னிலைப்பிப்பாரோ
மாயமன மேயிந்தக் காயந்தானும்
  வல்லமையோ வெத்தனைநாள் வாழுமோசொல்
காயமது நிலையல்ல வென்றுமுன்னோர்
  கண்ணொளி மழுங்குமுன்னே கதியுற்றாரே. (கஎ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அப்படியானாற் சாலவு மச்சங்கொண்டேன், இனி திருவடி யடைதற்குப் போந்த வழி சொல்லென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வெண்பா.

முந்திபரிபூரணமாய் முத்தியடைந்தவர்கள்
சிந்தைமகிழ்ந்தோதுஞ் சிவநூலை - யுக்தியுந்திப்
பார்த்தறிநீநன்றாய்ப் பகுத்துப்பகுத்துநெஞ்சே
சேர்த்தறிநீயென்வசத்திற் செல். (கஅ)

மனங்கேட்குதல்.

(அ-கை) அப்படியே சொல்லுகிற சில நூல்களைப்பார்த்தேன், திருவள்ளுவநாயனார் முப்பால் வைத்துக் குறள் சொன்னதிலே "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வா னென்பான் றுணை" என்று சொற்றன ரதென்கொலென மனம் வினவுவதற் கறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

விருத்தம்.

யாவரிருக்கு நிலையதனை யவர்க்கேயதனி னிலையமர, மூவர்முதலாம் ரிஷியோர்க்கு முழுக்கத்துறந்தோர் காபிலியர்க்குந், தேவரீர்க்குந் திறமுதலாய் சிறக்கக்காட்டுங்கண்ணொளிபோல், நாவிலிருந்தே அஞ்சனமாய் நவின்றமொழியென் றுயகமே. (கசு)

மனங்கேட்குதல்.

(அ-கை) ஆனால் முத்திநிலையை மாத்திரம் தனிமையிற் பேசுகின்ற நூல்தா னெவ்விதமாகச் சொல்லுமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வெண்பா.

தேகமெடுத்ததுவுஞ் சிந்தையுடைத்ததுவும்
போகசமுசாரத்திற் புக்கதுவும் - தாகமது
கொண்டுதவிர்த்ததுவுங் கூறுங்கனவெனவே
கண்டுசொல்லும்நூலதனைக் காண். (உ0)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் அந்த நான்கும் பார்த்தேன், அதிலுள்ள பொருளைச் சங்கையற இப்படி யிருக்குமென்று தெரிந்துகொண்டாற் போதுமோவென்று அதிவினயத்துடன் மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

விருத்தம்.

அறிவுக்கே சாட்சிகொண்டு நூலைப்பேசி
அங்கத்தைத் தானழித்து அகத்தைநோக்கு
குறிவைத்த படியிருந்து மெய்யைப்பொய்யாய்க்
குற்றமென்றே பொய்யைத்தான்பொய்யாய்க்கண்டு
நெறியுற்றே யிருவினையும் நீக்கிப்போட்டு
நேசமுட னீசனுடன் பாசம்வைத்து
பிறிவற்று ஒன்றாகி வாழலாகும்
பேதித்துப் போகாதே பேணிக்கூடே. (உக)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அந்தப்படிதானே யனுபவிக்கிறதா? மற்றொருவருடைய சகாயமும் வேண்டி யிருக்குமாவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

புகர்ச்சமயமாகின்ற பலசமயந்தன்னிலே புகுந்திடாமல், அகச்சமயமாகின்ற சிவசமயத்திச்சைக்கே யகப்பட்டானீ, மிகப்பெரிதாம் புத்தியைநீ படைத்திருந்தும் பெரியோரை மேவிடாமல், தகைப்படவே பிறவியென்ற நோய்க்குள்ளே சிக்கித்தான் றளர்வதேனோ. (உஉ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் பெரியோர்களைச் சாரவும் வேண்டுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

பெரியோரைச் சாராம லவர்களுக்கே யன்புசெய்து பேசிடாமல், துரியமா தீதத்தில் சிவபூஜை செய்யாமல் சுற்றிச்சுற்றி, அரியயனுங் காணாத பரமசிவ மென்றதையுமறிந்திடாமல், சரியென்று வினைப்பயனுங் கொண்டதுவே கோலமாய்ச் சாதித்தாயே. (உங)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் தெளிந்த பெரியோர்களுக்கு ஜகத்திலே பிரயோஜனமில்லையே, எவ்விடத்தி லிருப்பார்களோ! அவர்களைக் கண்டு தரிசிக்கலாகுமோவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

தெளிந்ததுறவி யிகந்தனிலே தேகப்பிராரத் துவப்படிக்கு, பொழிந்தேகரணத் தனுபோகப் புவனத்திருந்து

மெச்செயலும், ஒழிந்துசிந்தை தெளிவுற்றே ஒன்றேசிவ மென் றிருப்பார்க, ளிழிந்தபேரு மவனைக்கொண் டேறு வார்க ளிகத்தோரோ. (உச)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் இகத்தில் சஞ்சரிக்கிறதினால் பெரியோர் களுக்கு இடறுவாராதோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

கருவியகன் றிவ் வுலகத்தைக் கனவென் றிருக்கக் கரு த்ததனுள், ளுருவைக்கண்டொப் புவமையற்று வுள்ளும் புறம்பு மொன்றாகிக், குருவைப்பணிந்து பூரணத்தில் குலா வுமடியார் ஜகந்தனிலே, மருவப்பொருந்தி வாழ்ந்தாலும் மாசற்றிருப்பார் வல்லவரோ. (உரு)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் விபரீத மிருந்து வந்ததானால் அதை நீக்கிக் கொள்ள வல்லமையுண்டோ வென்று மனங் கேட்க அறிவு கூறு கின்றது.

அறிவுகூறுதல்.

முந்தவிருந்த வஞ்ஞான மூடமான சத்தியையும், பந்தமறவே துணிந்துபரா பரனைத்தினமுங் கைக்கொ ண்டு, சிந்தைதெளிந்தே குருபரனைச் சிவமென்றெண்ணுந் துணிவதனால், தொந்தமறுத்துச் சிவானந்தச் சோதியது வாய்ச் சுகிப்பாரோ. (உசா)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அப்பேர்ப்பட்ட பெரியோர்கள் எந்தச் சாதியாயிருந் தாலும் தொண்டுபடலாகுமோவென்று மனங் கேட்க அறிவு கூறு கின்றது.

அறிவுகூறுதல்.

சாதிபேதந் தனைக்குறித்துத் தயங்கிமயங்கித் தளராதே
சாதியாவ தெவரறிவர் சருவவுடலு மொன்றுச்சே
சாதியாவ ரெவரென்னில் தன்னையறிந்து சிவமான
சாதிபெரிய சாதியென்று சாற்றுமறைகள் சத்தியமே. ()

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் பெரியோர்களை சாதிபிரித்துச் சொல்லுகிற தினாலே குற்றமுண்டோவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

ஞானம்பதியா விழிகுலத்தோர் நாட்டிற்பிரித்தே
சாதிதன்னை, யீனசாதி யாரென்றே யிகழ்ந்தார் முத்தர்
பத்தரையும், ஆனபெரியோர் தங்களையு மவரிலொன்றாய்க்
குறித்துக்கொண், டீனமுரைத்தே யருநரகி லிழிந்து
போனு ரிகத்தோரே. (உஅ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) இப்பேர்ப்பட்ட பெரியோர்கள் ஜகத்தோ ரிகழத்தக் கதாகத் திரிவானேன்? ஜகத்தோரிகழுவானேன்? இதனால் யாரு க்குத் துன்பம், யாருக்கு இன்பமென்று மனங்கேட்க அறிவு கூறு கின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

பெரியோரைப் பித்தரென வுலகத்தோர்கள்
பேயரென்ன விகழ்வதென்ன பிரித்துக்கேளு
திரிவார்க ளிச்சைபடி ஜகத்தோர்பார்த்து
தீவினையும் நல்வினையும் திரட்டிக்கொள்வார்
சரியாச்சென் றிருவினையு மொழித்துப்போட்டு
சச்சிதா னந்தமென்ற பதத்திற்சார்ந்து
துரியாதீ தப்பொருளைப் பெற்றுமந்தச்
சுயஞ்சோதி யாகியே சுகமுற்றாரே. (உகூ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் பெரியோர்களிருவினையும் ஜகத்தோருக்கு ஒப்பித்து சுகம்பெற்றார்களே? அவர்களை இகழ்ந்த வுலகத்தா ரென்னலாபம் பெற்றார்களென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

பெரியோரை யிகழ்ந்தவர்கள் பெற்றலாபம்
பேசக்கேள் நெஞ்சகமே பெருமையாக
பரியேறிப் போனவன்றான் றீயில்வீழ்ந்து
பதைத்ததுபோ லடிவயற்றில் நெருப்பைக்கூட்டி
நரிவாயில் பொருள்பறிக்கு மின்பம்போலே
நகைத்திகழ்ந்தே எரிவாயி னரகம்புக்கு
விரிவான வெழுநரகில் விழுந்திளைத்து
மெலிந்திடுவா ரென்றுமறை வீசுந்தானே. (௩0)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் பெரியோர்கள் மகத்துவ மிப்படியென்று மறியலானேன், அப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தெரிசனங் கண்டுகொள்ளுகிறதற்கு மார்க்கமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

குற்றமேதுங் குறியாமல் குணமும்பலவாய் விரியாமல்
ஒத்துபொறிகள் புலனைந்து முறவாய்நீயு முகந்திதனை
பத்தும்பதன மாகத்தான் பட்சமிகவும் வைத்துரத்தாற்
சித்தமதனைச் சிவமாக்கு சிவானந்த போதமிதே. (௩௧)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனு லெவர்களிடத்திலும் சாத்திரத்தின் கேள்வி கேட்டுத் தெரியும்படிச் செய்துகொள்ளுகிறதுதானே? அவர்களாக்கினைக் குட்பட்டு தொண்டுபண்ண வேண்டுமோவென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வே று.

ஐயமின்றி யுடல்பொருளு மாவிமூன்று
மாண்டவனே யுன்னதென் றளித்துப்பின்னும்
துய்யகுரு நாதனுக்கே யடிமையாகிச்
சொன்னபடி கேட்பதற்கே தொண்டனுகி

மெய்யனென்றே யவர்மனமுங் களிக்குமட்டும்
வேண்டினதோர் சோதனைக்கு மிதத்திடாமல்
செய்யதிரு மலரடியிற் காத்திருந்தாற்
செவியதனி லுபதேசம் செய்வார்தாமே. (௩௨)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் வெகு பிரயாசையா யிருக்கும் போலிருக்கிறதே! சாத்திரங் கேள்வி மாத்திரங் கேட்டுக்கொண்டு யுக்தியிலே அனுபவித்து முத்தியடையக் கூடாதோ? குருசமுகத்தில் தொண்டுபட்டுதான் முத்தியடைய வேணுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

இருவினையுஞ் சமமுடைத்தே யெழுந்துவந்த
வெண்குருவா மாணிக்க வீசனுர்க்கும்
குருவடிவா யம்பலவ ருபதேசித்த
குறிப்பைத்தா னறியாயோ குருட்டுநெஞ்சே
மருவுமிந்த வுடலுக்கு ளுடலைக்காட்டி
வாக்குக்கு வாக்கருளி மனமுமொத்து
திருவடியி லடையகுரு முகூர்த்தமல்லாற்
சிவானந்த போதகமுந் தெளிந்திடாதே. (௩௩)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அப்படியானல் ஞானசாரியரிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டால் போதாதோ? சாத்திரமும் பார்க்க வேண்டுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

சேறுபோல் தளதளென வலைபூமிக்குள்
திடமான கம்பத்தை நாட்டினக்கால்
மாறுகொண்டு விழுந்திடுமென் றதனைச்சுற்றி
மணற்கல்லைக் கெட்டித்து முறைக்குமாபோல்
கூறுகின்ற சாத்திரத்தின் சாட்சிதந்து
குலைந்திடாத் திடமுற்றுக் குறித்துநின்று
வீறுகொண்டு நெஞ்சேநீ யனுபவித்தால்
மெய்ஞ்ஞான வீடதனில் விளங்குவாயே. (கூச)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் சாத்திரந் தெரியாத பேர்கள் சற்குருவினிட முபதேசம்பெற்றுச் சாதித்து அனுபவமடைந்த பேர்கள் பெற்ற காட்சி நூலிலுள்ள பொருளுக்கு ஒத்துக்கொள்ளுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

உறுதிகொண்ட பிள்ளையென்று லாசான்வைத்த
வுபதேசங் கேட்டளவி லுறுதிகொண்டே
இருதயத்தில் நாட்டினது நழுவிடாம
லெப்போதும் குருபத்தி தவறிடாமல்
மறுகவலை சாராம லூன்றப்பெற்றால்
வழங்குநூல் பேசுகின்ற வண்மைக்கொக்கும்
கிருபைதரும் முத்தியே யடையலாகும்
கிட்டினவர்க் கேதுகுறை கேடில்நெஞ்சே. (கூரு)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் ஞானனுபோகம் ஒருவர்பெற்றிருந்தால் பெருதவர்கள் அந்த வனுபோகத்தைச் சொல்லென்றும், காட்டென்றும் சொன்னலவர்களுக்கு ஒத்துக்கொள்ளும்படி சொல்லலாமோ? அப்படி இப்படியென்றுங் காட்டலாமோ? ஆகிலும் மெய்ப்பொருளினிட பிரகாசத்தைப் பேசினல் மனமொத்துக் களிப்பார்களோ வென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

ஒருவர்தின வொருவர்சொரிந் துற்றபோது
வுற்றவர்க்கோ சொரிந்தவர்க்கோ வுற்றுப்பாரு
மருவுமந்த சொப்பனத்திற் கண்டகாட்சி
மகிழ்ந்தவர்க்கோ கேட்டவர்க்கோ மதித்துப்பாரு
உருசியுட னறுசுவைகொண் டுண்டவர்க்கோ
உகைமையுடன் கண்டவர்க்கோ வூன்றிப்பாரு
தெரிசனமுங் கண்கண்டு சிந்தையற்ற
சிவஞான மவரவர்க்கே தெளியுந்தானே. (ருசு)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் மெய்ப்பொருளினுடைய பிரகாசம் அவரவர்கள் கண்டுகளிக்கப்பட்டதுதானேவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

நீதானே யறிந்தல்லோ நிலைக்கவேண்டும்
நிட்டூரர் சொல்லுகின்ற நெறியிற்சென்றாற்
போதாது போதாது பொந்துக்குள்ளே
புலியிருக்கு மென்றதென்னப் புகுந்துபார்த்தால்

வேதாள மென்றதொரு மயக்கந்தீரும்
மெய்யடியார் மனங்களிக்க மேவிவாழ்வாய்
வாதாடி முத்தர்களை விட்டிடாதே
மனமேநீ யுள்ளபடி வணங்குவாயே. (கஎ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனுற் றனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியோர்க ளொருவர்க்கொருவர் கூடிக்கொண் டானந்தமிகுந் துறவாடுகின்றார்களே! அஃதெவ்வித காரணம்பற்றியென மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

மறப்பான மூன்றுடனு மிழந்தமுத்தர்
மனவெளியாம் பெருவெளியில் மருவலாலே
துறப்பான வாகாச மொன்றுந்தன்னிற்
சூரியன்றன் பிரகாசத் தோற்றம்போல
சிறப்பாகத் தேகத்தி லிருந்தமுத்தர்
திருஷ்டியினுற் கலந்தொன்றுய்த் தியானிப்பார்கள்
மறைப்பான தில்லைநெஞ்சே கண்மணிக்குள்
வன்னியொளி மருவுமந்த வண்மைபாரே. (கஅ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனுற் சாத்திரங்களிலே சரியை, கிரியை, யோகம், ஞானமென்று சாற்றுகின்றதே யவற்றுள் முன் சொல்லிய முத்தொழிலுஞ் செய்து முடிந்தபின்னரன்றோ ஞான மறிய வேண்டியது. அப்போதன்றோ ஞானசாரியர் கிருபாகடாக்ஷம் வேண்டியதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

சரியைமுதன் முத்தொழிலுஞ் செய்கின்றோர்கள்
சாயுச்சிய முத்திரையைப் பணியவேண்டும்
உருசியுட னமுதளித்துப் பாதபூசை
யுண்மையுட னுபசாரஞ் செய்யவேண்டும்
பரிசைகொண்டு சோதித்து நிந்தைசொல்லி
பகைத்துவிடி னகைத்திடுவார் பலனேபாழாம்
விரிவுகொண்டு மயங்காதே யுற்றுப்பாரு
வீணருடன் கேள்விவிட்டு மெய்யைப்பாரே. (௩௯)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனாலவ்வளவு மகத்துவமிருக்கிற படியினாலே யம் முத்தொழிலினது லாபமுஞ் சுளுவிலே இவராலே முடித்துக்கொள்ள லாகாதோவென மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

சாயுச்சிய முத்திரையை யடுத்துக்காத்துச்
சங்கையற்றுத் திருவுளத்துப் பாங்குக்கொத்தால்
நீயுச்சிய மாகவென்று கிருபைநோக்கில்
நேரான முத்தொழிலி னிலாபநேர்ந்து
மாயுச்சிய மாகவே யம்பலத்தான்
மலரடிக்கே யன்பாகச் செல்வாய்நெஞ்சே
பாயுச்சிய மாகவே பெற்றோருண்டு
பராபரத்தை யடைந்ததின் பண்பிஃதாமே. (௪0)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனு லித்தகைய வனுபவத்தை இல்லறத்தினின்று பெற்றுளரெவரேனு முண்டு கொல்லோ? அன்றேல், துறவறம் பூண்டு, சந்நியாசியாய்ப் பற்பல விரத வைராக்கியமும் சர்வசங்க நிவிர்த்தியுஞ்செய்து, ஜெகசஞ்சாரத்தை விட்டகன்று, ஆரணிய சஞ்சார முற்று வருபவர்களின் ஞானமென்னு மறிவு பிரகாசமாகி ஸ்பஷ்டப்பட்டுளரோ வென்றும், இவர்களிலுந் தம்மனதுட் குடிகொண்ட வஞ்ஞானுந்த காரத்தை யோட்டும் வன்மையிலராகிமூடராதலு முண்டோவென்றும் மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

சன்னியாசி யானதிலு மூடருண்டு
சமுசாரஞ் செய்வதிலு ஞானியுண்டு
முன்னுலே யேதுவாம் பிராரத்துவங்கள்
மூட்டிவிட்டு ஞானிக்கு முறைதப்பாது
பின்னுலே யிருவினையுந் தொடரச்செய்து
பெற்றிடுவா ராசான்றன் கிருபைகொண்டு
பின்னுபின் னங்களா லென்றெண்ணுதே
பெருஞ்சோதி முத்திரையைப் பேணிக்கூடே. ()

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனுல் இல்லறத்திலேயிருந்தும் ஞானம் பெற்றுக்கொள்ளலாமென்கிறது சுளுவாகவிருக்கிறதே! உலகத்திலுள்ளபலரும் ஞானுசிரியரிடத் தனுக்கிரகம் பெற்றுக்கொண்டு முத்தியையடைவ தருமையாயிருக்கிறதே! அதிலென்ன பிரயாசையென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

யாவர்களும் பெரியோரை யடுத்துக்காத்து
அவரடிக்கே பணிந்துமிக வன்புசெய்து
ஆவலுடன் பன்னிரண்டு வருடங்காத்து
மப்போது பக்குவத்தை யறச்சோதித்துத்
தேவர்முதன் மூவர்களுந் தேடிக்காணுத்
திருவடியு முடிநடுவுந் தெரிசிக்கத்தா
ளுவதனு லுபதேசஞ் செய்வார்நெஞ்சே
நல்லறிவால் வெகுபூசை நவின்றதாமே. (சஉ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனுல் புண்ணிய மிருந்து சிவாசாரபக்தி, நேயம், சிவார்ச்சனை வெகுகாலஞ்செய்து பின்னே நல்லறிவு பிரகாசித்திருக்கும் பேர்களுக்குப் பெரியோர்கள் தரிசனங்கிட்டும்: அப்பேர்ப்பட்டவன் ஆசான் திருவுளத்துப் பாங்குக் கொத்து நடந்து பரகதியடைவானேன்று சொன்னது மறியலானேன். ஆகிலும் பெரியோர்களை யடுத்து, அவர் திருவுளத்துக்குப் பாங்குபோல் நடந்து, தீக்ஷையும் பெற்றுக்கொண்டு, சாத்திரத்திலுள்ள பூட்டை அனுபோகத்துக்கும் ஒப்பும்படி தெரியவுங் கேள்விப்பட்டுக்கொண்டு, ஆசாரியனாக் கவனியாமல், மதங்கொண்டு, ஆசாரியார் திருவடிசூட்டமகிழ்ச்சியில்லாமலும், பூரண தீக்ஷையாகாமலும், தட்டிப்போகிற துண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

அடியருக்குத் தொண்டாவ தருமைநெஞ்சே
யவரவர்க்கு விட்டகுறை யடுத்தகாலம்

பிடியாம லிருப்பாரோ தொட்டுக்கொள்வார்
பேதைமைக ளாலுலகம் பிணக்குவந்து
குடியாகு மதனாலே நழுகிப்போவார்
குற்றமறச் சற்குருவைக் குறிக்கச்சொல்லும்
விடியாத காலத்தி லிருளேயாகும்
விடிந்தபின்பு கண்ணுக்கு வெளிச்சமாமே. (சங)

மனங்கேட்குதல்.

(அ-கை.) நீர் உலகவிபரீதம் வருகிறதாகவும், அதனாலே ஆசானைவிட்டு நழுகும்போது ஆசானைக் குற்றமாகக் குறித்துக்கொண்டு போகிறதாகவுஞ் சொன்னீர், அறியலானேன்; ஆகிலு மிவ்வளவிலே நழுகினாலும், இன்னொரு தேகம் புண்ணிய மிகுந்த மானிடமாயெடுத்து, சடுதியிலே விட்டகுறை முடியும்படி ஞானசாத்திரியார் கிருபையடைந்து, முத்தியடைவார்களோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

இவ்வளவுந் தொட்டேகும் போதுமீண்டும்
இகபோக விபரீதம் வந்தாலுந்தான்
அவ்வளவுந் தான்குருவின் றிருவுளத்துக்
கன்புதவ றுமலே யகன்றாகிற்
றெவ்வளவாய் விட்டகுறை தாக்குஞ்சேர்க்குந்
தேசிகனைக் குற்றமெனிற் றெளிந்துமேலாம்
நவ்வளவா யிழிந்துவிடும் பின்னுமந்த
ஞானகுருத் துரோகமுற்று நரகஞ்சேர்வார். (சச)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் ஞானசாரியாரிடத்தி லொத்தாப்போலிருந்து தெரிந்துகொண்டு, ஞானகுருத்துரோகி தானேதான் றெளிந்தவன் போலே பேசுகிறனே, உலகத்தார்களுஞ் சிறிதுபேர்கள் அதைக் கேட்டு மயங்கி ஒத்து வணங்குகிறார்களே அவர்களுக்கு மிவர்களு க்கு மென்னலாபங் கிடைக்குமென்று மனங்கேட்க அறிவு கூறுகி ன்றது.

அறிவுகூறுதல்.

புலித்தோலை பசுவுரித்துப் போர்த்துக்கொண்டு
புலியென்றாற் புலியாமோ வின்னுங்கேளு
பலிப்பாகப் பெண்போலே புருடன்வேடம்
பகட்டினு லவனுருவம் பாவையாமோ
சலிப்பான நரகத்தில் வீழுமாண்பர்
சற்குருவின் றன்னிடத்திற் கற்றுக்கொண்டு
நலிப்பாகப் புலிப்பாயு மியல்புபோலே
நானிலத்தோர் வணங்கின தா லீனமாச்சே. (௨௫)

மனங்குகேட்குதல்.

(அ-கை.) ஆனலவன் றானுங் குருத்துரோகி யானபடியினலே எவ்வளவு தெளிவாய்ப் பேசினலும் முத்திவிலக்க னென்பது சரியே. அவன் நிச்சயவானென்றுநேசிக்கிறவர்கட்கு என்னவிலா பமென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

மரப்பசுவின் முலையதனிற் பாலுண்டாமோ
மலடிக்குச் சுதனுடைய மகிழ்ச்சியுண்டோ
துரத்தறியாத் தண்ணீர்ப்பாம் பதன்றலையிற்
றுலங்குமணி யிரத்தினமுந் தோன்றுமோசொல்

பரத்தினிட நிலையதனைக் குருமுன்பாகப்
பதியாத மூடனையே பணிந்ததாலே
வியர்த்தமே யல்லாம லுதவிசெய்ய
விஞ்ஞான முண்டாமோ விளங்குநெஞ்சே. (சகூ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனாலறியலானேன், ஸ்ரீகட்கு ஞானம் வாராதெ ன்றும், புருடர்க்கு மாத்திரம் ஞானமுண்டெனல் எதனாலே? அஃது விளங்குமாறு சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

அஞ்சுகின்ற பெண்ணென்று மாணென்றுந்தா
னஞ்சுபஞ்ச பூதத்திற் பிரிந்ததுண்டோ
நெஞ்சிலுள்ள வஞ்சகங்கள் வேறுமுண்டோ
நிறம்வேறோ குணம்வேறோ நேசம்வேறோ
மிஞ்சுகின்ற வுயிர்தானும் பெண்ணென்றுண்டோ
மெய்கண்ட நூலதிலே பிரித்ததுண்டோ
சஞ்சலத்தாற் சொற்கேட்டு மயங்கிடாதே
சங்கையற முன்னூலைச் சார்ந்துபாரே. (சஎ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் பேதமையென்பது மாதர்க்கணிகலமென்றும் ஔவையார் கூறிய தென்கொலென் றறிவினை மனங்கூறு கின்றது.

அறிவுகூறுதல்.

ஆணுக்கும் பெண்ணுக்கு மறிவொன்றேயாம்
ஆனாலும் பேதைகுணம் பெண்ணுக்குண்டு
வீணுக்கே யெடுத்தசென்ம மனந்தங்கோடி
விவேகமுத்தி யடைந்தவர்க ளதிலுமுண்டே

ஊனுக்குத் தேடியுண்டே யுறங்கிச்செத்த
  வுழுத்தருண்டு புருஷரிலே யனந்தங்கோடி
தாணுவினுக் கேகசரா சரந்தானெஞ்சே
  சற்குருவுக் கப்படியே சார்ந்துபாரே.   (சஅ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனாலதுவு மறியலானேன். நான் கேட்கப்பட்ட சங்கைக்குச் சரியென்னும்படி சமாதானங்கொடுத்து அருமையாய்த் தெளிவுடனே யார் சொல்லப்போகிறார்கள்! இனிமேல் நடக்க வேண்டிய தென்னவென்று குதூஹலங் கொண்டு மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

இன்னமின்னம் பிறவிதனிற் பிறத்தனன்றே
  வினிமேலும் பிறவாம லிருக்கைநன்றே
வுன்னுகின்ற நினைவேது கருத்தங்கேதோ
  வோதுகின்ற வாக்கேது செவிதானேது
பன்னுகின்ற கலையேது பண்தானெங்கே
  பாடுகின்ற சத்தந்தான் தொனித்ததெங்கே
முன்னிலையாய் ஞானகுரு மொழிந்ததேது
  முத்திநெறி யாய்மனதே முனைந்துபாரே.   (சகூ)

மனங்கேட்குதல்

(அ-கை.) ஆனாலெவ்விசத்திலேயும்! பார்க்குமளவில், இந்தக் குடும்பச்சேற்றில் உழைத்துக் கொள்ளுகிறதும், அதற் கொத்தாசையா யுலகத்தார்சொல்லை விசுவாசமாய் ஒத்துக்கொள்ளுகிறதும்,

துக்கமேயொழிய உள்ளபடி குடும்பத்தார் என்மேல் பிரியமாயிருக்கிறதேயில்லை. எப்படியெனில்:—நான் சிலநாள் சம்பாதனையில்லாமலும், தேகசௌக்கியமில்லாமலும், ரோகஸ்தனாக விருக்கும்போது சர்வத்திரபேர்களும் என்மேல் மனது சலிப்புற்றிருந்தது கண்டேன்; ஏவல் பணிவிடையில் வெறுப்பானதுங் கண்டேன்; சாலவும் பிரக்ஞைதப்பி யிருக்கும்போது பெண்டுபிள்ளைகளை எதிர் வீட்டார் ஆஸ்தியைக் கேட்கச் சொன்னதுங் கண்டேன்; அவரவர்களழும்போது ஒப்பனைசொல்லி அழுகிற வயணமுங்கண்டேன்; எல்லாம்பொருளை யிச்சித்திருப்பதென்று மறியலானேன்; எனக்கு உரிமையானபேர் ஒருவரையுங்காணேன்; அல்லது சிலது நாளுழைத்து மக்கண் முதலாகியபேர் சம்பாதிக்கச் சாமர்த்தியம் வருந்தனிலும் உழைத்துப்போட்டு அதன்பின் சும்மாயிருப்போமென்றாலும் என்னிச்சைப்படி நடக்கவுமாட்டாது, அதுவுமறியலானேன்: ஆகையால் சத்துருவாகிய இந்தப் பேய்க்கூட்டங்களை விட்டு காயந்தளராமுன் சிவன்றிருவடியடைதற்கு நீ சொன்னபடி சத்தியமாய் நடப்பேனென்று மனஞ்சொல்ல அறிவு கூறுகின்றது.

பணியறுத்தல் முற்றிற்று.

அறிவுகூறுதல்.

வேறு.

பொன்னினெஞ்சமே சொற்படிகேட்கவும் பொருந்தியேநன்றாக, இன்னமின்னமும் பேதைமைகொள்வையோ,வில்லறந்தனைவிட்டு, தன்னைத்தானறியாமலுஞ்சிவ

ணடி சார்வதுமிழந்தாக்கால், பின்னமபின்னமா யிரண்டு
ங்கெட்டானென்றே பேதைமைகொள்வாயோ. (௫०)

மனங்கேட்குதல்.

(அ-கை.) இதனால் நான் தெளிந்தவிதத்திலே பேதைமையென்ப திருக்குமிடமுங் காணேன். சர்வபணியு மறந்துவிட்டேன். ஆனால் தெளிவாய்க் கேட்பதற்குத் தெரியும்படிச்செய்யு முதவிவேண்டு மென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

சுத்தநெஞ்சமே சற்குருமலரடி தொழுவகைகேட்பாயேல், பத்தனாகியே மானாபிமானமும் பற்றறவிட்டேநீ, குற்றமேதுமற் றெவ்விடங்காண்கினுங் கூறுடற்களிப்புற்று, பற்றுமாகியே திருவடிகெதியெனப் பண்புடன்பணிவாயே.

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் மானாபிமானம்விட்டு, குருவை எவ்விடங்காண்கினு மனோ வாக்குக் காயம் ஒத்து. அன்புகளிகூர்ந்து எண் சாண் தேகத்தை இருகையாக்கி, நன்மலரால் அவர் திருவடிக்குச் சாத்தி, தீர்க்கதெண்டம் பண்ணச் சொன்னீர், அதற்குச் சந்தேகமில்லை. இவ்வளவுமிழந்து நான் இதற்கஞ்சுவேனோ. அப்படியே செய்வேன். ஆனால் அதிகமாக உலகத்தார் இகழத்தக்கதாக குரு மிகுந்த அசங்கிய ரூபமாக விருந்தால் நான் பணியுமளவிலே நிந்திப்பார்களே! அல்லது அவ்வாறிருக்கினும் அப்படிதான் செய்தல் முறைமையோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

குவலயத்தோர் சொல்கின்ற கேள்வியாலே
கூசுகின்ற நெஞ்சகமே கூறக்கேளு
அவலமாங் கடலுக்கு ளாழுமாண்பர்
அபிமானம் வந்துன்னை அண்டிற்றானல்
சவலையாய் நழுகிடுவாய் முத்திமார்க்கந்
தான்கிடைப்ப தருமையதைச் சார்ந்தேநீதான்
சிவனடியை யடைவதற்கு சற்குருத்தன்
திருவுளத்துக் கொத்தவழி செல்லுவாயே. (௫௨)

மனங்கேட்டதல்.

(அ-கை.) ஆனல் சற்குருவின் திருவடியில் சரணஞ்செய்வதற்கு மார்க்கமுண்டோவென்று மனக்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

ஓம்நமசி வாயவென்ற வக்ஷரத்தை
உச்சிக்கண் புருவம்வாய் மூக்குநாசி
தாமசங்க ளில்லாமல் முக்காலுந்தான்
சற்குருவின் திருவடியில் தானமுத்தி
நேமமா யிப்படியுஞ் செய்வதுந்தான்
நேரான சரணத்தின் தீக்ஷையாகும்
ஆம்பின்னே யென்றெண்ணி யிருந்திடாதே
ஐயனுள்ளங் களித்திடவே யாசைவைப்பாய். (௫௩)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனால் சரணதீக்ஷையுமறிந்தேன், செய்யவுந் துணிந்தேன், கருத்தில் செய்யும்படி குறித்தால் போதாதோ? காயத்தினாலு மிகுதியாய் வணங்கிக் கொள்ள வேணுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

காயமன வாக்கினா லடைந்தகன்மங்
காயமன வாக்கினாற் கடக்கவேணும்
காயமன வாக்கினா லொன்றொளித்தால்
கடமெடுக்க வேதுவாங் கண்டுபாரு
நேயமுள வைம்புலனாற் சூழ்ந்ததுன்பம்
நீக்குதற்கு முறையிதுதா னிலைத்துப்பார்நீ
மாயவித்தை யாமென்று நழுகிடாதே
வஞ்சகத்தை நீவிட்டு வணங்குவாயே. (௫௪)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனாலப்படியே செய்கிறேன், இன்னஞ் சற்குரு திருவுளத்துக்குப் பாங்காய் நடக்கு மார்க்கங்கள் சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வஞ்சனைபொய் சூதுகப டங்கணீக்கி
மானவபி மானமுதற் பெருமைநீக்கி
யஞ்சுகின்ற கோபமாங் காரநீக்கி
ஆசைபதைப் பாதியடி யோடேநீக்கி

துஞ்சவே சோதித்துப் பார்த்தாலுந்தன்
துணிவாகித் திருவடியே கெதியென்றெண்ணி
தஞ்சமென்றே யையனது நிழல்போற்காத்து
சரணத்தி னேவல்செய்து தழைத்திடாயே. (௫௫)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அப்படியே தொண்டுசெய்கிறதற்கு மாளானேன், எத்தொழிலு மில்லாமல் சர்வ ஆசையுமிழந்து சிரந்தரமாயிருக்கிற பெரியோர்களிடத்தில் தொண்டுபட்டிருந்தால், வயிற்றுப் பசிக்கு அன்னம் வேண்டியிருக்குமே யதற்கென்ன வயணமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

இச்சையுட னெத்தனைநா ளிவ்வுலகில் வாழ்ந்தாலு மிடரே சொல்வார், நச்சைவரு மிதனாலே தெளிவுற்ற மனதென்று நல்லோர் சொல்லார், சச்சடியை விட்டுவிடுமுப் பொருளை யோர்பொருளாய்த் தனித்துப் பாரு, பிச்சை யென்ன விசாரமென்ன தலைமேலே சுமந்துவரப் பெருமானுண்டே. (௫௬)

மனங்கேட்குதல்.

(அ-கை) அப்படியிருக்கச் சிவசொரூபத்தைப் பெற்றிருக்கின்ற பேர்கள் ஆகாரத்துக்காகப் பலவிதங்களான தொழில்செய்கிறதும், சித்துக்கள் வித்தைகள் செய்கிறதும், பொய்சொல்லுகிறதும், சிவசின்னவேடத்தைக் கபடாகத் தரித்துக்கொள்ளுகிறதும் என்னவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

ஆனைமுத லெறும்புகடைக் கமுதளித்துக் காக்கு மொருவரனேயல்லால், சேனைவித மாகவிந்த மானிடர்கள் செய்வதெல்லாஞ் செகத்தின்மாயை, ஊனைமுதல் சுமந்தவரார் உண்டபின்பு களித்தவரார் உற்றுப்பார்க்கில், தேனையுண்டு ருசிகண்ட திருடனைத்தான் கண்டவர்க்குத் தெரியுந்தானே. (௫௭)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனு லறியலானேன், பெரியோர்களிடத்தில் பக்தி வைராக்கியத்துடனே ஙிமிடநேரமாகிலும் பிரியாமல் சரணடைந் தேவலுஞ் செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு எந்தபதவிகிட்டும்? என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

ஆசான்கிருபை மிகுந்ததனு லந்தவுடற்போய் மறுவுடலில், கூசாதிருந்துந் தன்னண்டை குறைவொன்றில்லா நிறைவாக, தேசாநேசர் சூழ்ந்திருக்கத் திருவோலக்கஞ் சேவிக்க, ஈசாவென்றே மறைபோற்ற வெய்தும் பரமபதம்நெஞ்சே. (௫௮)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனுல் ஙிழற்போற் பிரியாமற் சரணத்தேவலுஞ் சலியாமலும் செய்கிறேன். ஐயோ! எத்தனை பிறவியோ எடுத்து வந்து நொந்திருக்கிற நான் இன்னுமோர் பிறவி பிறப்பேனு!

தும் பிறவாமலிருக்கிற மார்க்கமுண்டோ? அதைச் சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

வேறு.

உடல்பொருளு மாவியுஞ்சற் குருநாதற்கே
வுண்மையுட னுதகத்தால் தாரைவார்த்து
நடமாடு மிம்மூன்று மெனதென்றெண்ணு
நாயகனுஞ் சீவனையே யடிமையாக்கு
திடவாக்குத் தவறாமல் நிலைத்துநெஞ்சே
தேகந்தா னொழியளவு முதவிசெய்தால்
படமாடு மரவத்தை யணிந்தவீசன்
பதம்பெறுவா யுள்ளபடி பகர்ந்திட்டேனே. (ருகூ)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனல் நல்லதாயிற்று, இதுவரைக்கும் நானே உடல், பொருள், ஆவி மூன்றுக்கு முடையவனென்று நீர் சொன்னபடி கேட்டு சருவசங்கையுமிழந்து நிருவிகாரியாய் என்ன கெதியென்று கேட்குமளவிலே சீவனுண்டென்றும், சீவனுக்கு உடல் பொருள் ஆவி தொந்தமென்றும், அதைக் குருவுக்குத் தத்தஞ்செய்து சீவனை அடிமையாக்கி ஆசான் சொற்படி நடந்து சிவேசனுகிறதாய்ச் சொன்னீர்; மகாசந்தோஷமாயிற்று! அப்படியே சீவன்முத்தி யடைகிறதானல் நானித்தனைப் பிரயாசப் படவேண்டிய தென்ன? நான் நீயார் இவ்வளவு நான் சந்தேகமற்றுத் தெளிவுகொண்ட லாபமென்னவாகப் போகிறதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

சிவனே நீயாகு மறிவுநீயாஞ்
சிவன்றனே நீயாகும் பரமுநீயாம்
தாவுகின்ற செயலுடனே மனதென் றுன்னை
சாற்றியதோர் நாமமாஞ் சர்வசங்கை
மேவவே மொழிகிறது முனதால்நெஞ்சே
மெல்லமெல்லச் சொற்படியே மேவினக்கால்
நாவுதனிற் பிரிக்கின்ற பேதமற்று
நாம்சிவமாய் வாழலாம் நாடிப்பாரே. (௬0)

மனங்கேட்குதல்.

(அ-கை.) ஆனு லறியலானேன், இனி உடல்பொருளாவி மூன்றும் குருவுக்குத் தத்தம்பண்ணச் சொன்னீர். இந்த மூன்றையுந் தெரியப்படுத்துமென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

உடலென்றுற் சடாதார வுடலேயாகும்
உயிரான பிராணனே யாவியாகும்
திடமாக விரண்டையுந்தா னெனதென் றுற்ற
சிவனே சிற்றம்பலப் பொருளதாகும்
அடவாக விம்மூன் றுங் கொடுத்துத்தன்னை
அடிமையெனச் சத்தியமா யிருந்தால்நெஞ்சே
இடமான கதிபெறவே யுபதேசிப்பார்
இப்படியே குருபதத்தி லிஷ்டம்வையே. (௬௧)

மனங்கேட்குதல்.

(அ-கை.) அப்படியே செய்யலுற்றேன், இனி தீக்ஷையென்பதும், நூலென்பதும், குருசொல்லென்பதும், சாதகமெனபதும், முத்திவீடு என்பதும் தெரியச்சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

தீக்ஷையது நூலாகும் நூல்விளக்காம்
திறமான சற்குருசொல் லுபாயமாகும்
தாக்குகின்ற சாதகந்தா னேணியாகும்
சபையென்ற வெளிதானே வீடதாகும்
மார்க்கமென்ற திதுநெஞ்சே முன்னோர்கூட
வாழ்ந்தவரு மிப்படியே மருவிப்பாரு
நோக்கையிலே யிதிலொன்று நழுவிற்றானல்
நொந்துநொந்து பிறவியினி னுழைக்கும்பாரே. ()

மனங்கேட்குதல்.

(அ-கை.) எல்லாம் உள்ளபடி யென் றறிந்துகொண்டேன், இனிமேல் சற்குருவினுடைய திருவுள மகிழ்ந்து நான் கடைத்தேறும் பொருட்டாய் உபதேசஞ் செய்யும்படி சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

அப்படியே செய்விப்போ மழகுநெஞ்சே
யாசான்றன் றிருவடிக்கே யன்பதாக
வெப்படியா கிலுமுன்னை மாயைகிட்டி
யிதம்போலாம் ஜெனனமதற் கிடங்கொடாதே

செப்படிபோல் வந்ததொரு ஜெனனநீங்கி
சிவானந்த போதகமாய்த் தெளிவாய் நீயும்
மைப்படியுங் கன்னிபங்கன் குருவாய்வந்து
வாதனையைத் தீர்த்திடுவார் வணங்குவாயே. (சுங)

பொது கவனிப்பு.

(அ-கை.) இதுவரையிலுஞ் சீவனைப் பின்னிட்டு, மனதை முன்னிட்டு, சற்குருவைப்பின்னிட்டு, அறிவு முன்னிட்டுக்கொண்டு மனத்தினுடைய பணியறுத்து சற்குருகடாக்ஷம் பெற்றுக் கொள்ளும் வகை கூறினது. இனி மனதைப் பின்னிட்டு ஜீவனை முன்னிட்டு ஜீவனுக்குள் மனமொடுங்கி முத்தி யடையத்தக்கதாக அறிவைப் பின்னிட்டு சற்குருவை முன்னிட்டு அறிவைச் சீவனுக்குப் போதித்து நீ நானென்று இரண்டில்லாத பரிபூரணமாய் ஆக்கும்பொருட்டு ஜீவனுக்குக் குரு சிவானந்தம் போதிக்கு மார்க்கம் கூறுகின்றது.

ஜீவன் சொல்லுதல்.

ஆதியே யந்தமே யருமையான
வருட்கடலே யையனே யகண்டமுற்ற
சோதியே சொரூபமே சுகத்தைக்காட்டும்
சுத்தனே சித்தனே சுயம்பிற்பொங்கும்
பாதியே பரமனே பாரின்மீதே
பரம்போகச் சுந்தரமா யெழுந்துவந்த
நீதியே யென்னுடைய பிறவிநீக்கும்
நிச்சயமே திருவடிக்குச் சரணென்றேனே. (சுச)

குரு சொல்லுதல்.

தீக்ஷமுறை யாகவே சரணஞ்செய்த
செல்வனே ஞானமென்ற தீறம்பெற்று
பாக்கியமாய் மெய்ப்பொருளைக் கொள்ளவேண்டிப்
பாரினிலே வெகுபேர்கள் பதைத்துவந்தார்
பாக்கியத்தாற் சிதறினர் சிலதுபேர்கள்
பாழ்மனத்தாற் சிதறினர் சிலதுபேர்கள்
தாக்கியதோர் சாதகத்தில் தாளாமற்றான்
தவறுண்டே போயினர் சங்கையுற்றே. (௬௫)

சங்கையது விட்டாற்போற் றொன்றுபட்டு
சாத்திரத்தின் பூட்டுகளைத் தெரிந்துகொண்டு
மங்களமாய் தீக்ஷதனைப் பெற்றுநன்றாய்
வையகத்தின் சுழலினிலே மயங்கிச்சென்று
பங்கமா யபிமானத் தொழிலேசெய்து
பதுங்கினர் குருமுகத்துக் காகாமற்றான்
திங்களணி சடையார்தன் பாதஞ்சேர
தீவினையில் மெலிந்திட்டார் சிலதுபேர்கள். (௬௬)

அப்படியே நீநழுகித் தடத்தைவிட்டே
யம்பலத்திற் கேகாமற் காலன்பாசந்
தப்பவகை யறியாமற் பிறவிதன்னிற்
சாருவையோ நிலைகொண்டு சாதிப்பாயோ
ஒப்பவே யுடற்பொருளு மாவிமூன்று
முலகந்தால் தாரைவிட்டு வுனானொன்று

செப்பவுந்தா ளுவிழுந்தே யடிமையாகிச்
சிந்தையற்றுச் சிவமாகி வாழ்கநீயே. (௬௭)

ஜீவன் சொல்லுதல்.

பாக்கியங்கள் பெறவேண்டி குருவடிக்கு
பதறியே வந்ததொரு பாரிலுள்ளோர்
வாக்கினல் மனத்தாலுஞ் சாதகத்தின்
வருத்தத்தாற் சிதறினபே ராராளையா
னோக்கினத்திற் றவருமற் பிடித்துமுத்தி
நுண்ணறிவாற் பூரணத்தை யடைந்ததாரோ
தாக்கியதோர் மைந்தர்களை யறியச்சொல்லும்
தயாபரனே குருமூர்த்தி சொல்வாய்நாதா. (௬௮)

குரு சொல்லுதல்.

எத்தனையோ மைந்தர்களைப் பெற்றேனப்பா
வெடுத்துரைப்பேன் மதலையே யின்பமாக
பத்திவை ராக்கியமு நழுகிடாமல்
பாரிலுள்ளோர் தங்களுக்குச் சொந்தமாக
முத்திபெறு மனக்கண்ணும் பிரகாசித்து
மூதறிவால் தத்துவத்தை முழுதுமாள
சத்துசித்தா னந்தமுமாய்ப் பூரணத்தைச்
சார்ந்திட்டான் குழந்தையென்ற தங்கந்தாமே. ()

ஆமென்றே வந்தவர்க ளின்னமுண்டு
அவரவர்க்குத் தீக்ஷைவைத்தோ மன்பதாக

ஓமென்ற முத்திநெறிக் கொவ்வுவாரோ
ஒதுங்கியே பதுங்கியே யோடுவாரோ
நாமென்ற வகங்கொண்டு நழுகிப்போனார்
நாதனையே தூஷித்து நலம்பெறாமல்
போமென்றே தள்ளவில்லை யவர்கள்தானே
பொல்லாங்கைக் குறித்தல்லோ போய்விட்டாரே.

நிலைக்கவென்று வந்தவரில் தவறிப்போன
நெஞ்சகனைச் சொல்லக்கேள் நினைவாய்நீயு
முலைகருதிக் கைப்பிடித்துப் பாலுண்ணாமல்
மூடத்தால் நானென்ற மகத்தையுற்று
கலைகருதி நில்லாமற் சாதிக்காமல்
கற்றபொருள் போதுமென்றே பெருமைகொண்டு
கொலைகளவாம் வஞ்சகத்தை விடாமற்றானே
குலைந்திட்டான் வைத்தியலிங்கன் குரூரன்றானே.

ஜீவன் சொல்லுதல்.

அப்பனே மைந்தர்கள்தன் றிறத்தைக்கேட்டு
அறிந்திட்டேன் முத்திபெற்றோர்க் கடியேன்றானே
செப்பமாஞ் சரணங்கள் கோடிசெய்தேன்
சிதறினவர் பால்மனமுஞ் சொல்லவொட்டேன்
கொப்பெனவே யென்னையாள விங்குவந்த
கொற்றவனே யுனைப்போலத் துலக்கங்காணேன்
இப்பவே யடிமைகொண்டு காக்கவேண்டி
யிரங்கியே யருள்புரிவா யெந்தன்கோவே. (௭௨)

அறிவாள னாகியே பணியறுத்து
அச்சங்க ளெல்லாந்தா னறுத்துப்போட்டு
குறியாள னாகவே துணிந்துவந்த
கொடும்பாவி யெனையாளக் கூச்சமென்று
தறியாள னாகின்ற வுலகத்தேதான்
சங்கையது வந்தாலுந் தாளமாட்டேன்
முறியாள வந்தகுரு நாதாவுந்தன்
முகிழ்மலர்த்தாள் கெதியென்று முனைந்திட்டேனே.

குரு சொல்லுதல்.

நிலமதனைச் சலத்தினாற் சுத்திசெய்து
நிராமயமாங் கணபதியை நாட்டிவைத்து
பலமுடைய சோதிமலர் சாத்திமிக்கப்
பரிவான புகைதூபங் காட்டிப்பின்னுந்
தலமுடைய வெளியதனை நிவேதனஞ்செய்
சரணஞ்செய் யென்மகனே யுபதேசிப்போம்
பிலமுடனே யிடம்வலமாய்ச் சுற்றிவந்து
பெருவிரலைப் பற்றிக்கொள் பேரின்பத்தே. (எச)

அன்புடனே யுடல்பொருளு மாவிமூன்றும்
அறுதியா யளித்துவிட்டு நீதானையா
தென்புடனே யடிமையெனச் சத்தியஞ்செய்
சிதறுமல் நில்லப்பா தீக்ஷைவைப்போம்
பின்புந்தன் செவிதானே யோனியாக
பேசுமெந்த னாவுதா னிலிங்கமாச்சு

இன்பமுட னனுபோகத் திருக்கவென்றே
இருசெவியி லுபதேச மேற்றுவோமே. (எரு)

ஜீவன் சொல்லுதல்.

அப்படியே பஞ்சசுத்தி பூசைசெய்தேன்
அழகாகச் சரணங்கள் பிரகாரஞ்செய்தேன்
செப்பினதோர் பெருவிரலைப் பற்றிக்கொண்டேன்
தேகமுடன் பொருளாவி தத்தந்தந்தேன்
ஒப்பதுவா யானுமே யடிமையானேன்
யுகமுழுகத் தடைவரினு மசையாநிற்பேன்
தற்பரனே தீக்ஷைசெய்யுங் கருணைவைத்து
சற்குருவே திருவடியிற் சரணென்றேனே. (எசு)

குரு சொல்லுதல்.

வேறு.

ஞானமென்பதில் நால்வகையுண்டதை நாமுரைத்தி டக்கேளாய், தானமுற்றனர் சரியையுங்கிரியையுஞ் சாரு மேசிவயோக, மோனமுற்றமெய்ஞ் ஞானமே நான்கதா முடிவதைப்பெறுவாயே, யீனமற்றவென் மைந்தனே யுன் னிட மின்பமேதுரைப்பாயே. (எள)

ஜீவன் சொல்லுதல்.

தேசிகாவிந்த நால்வகையென்றதை தெரியவுமுரைத் திட்டால், மோசமாயின்ப முற்றிருப்பதுதனை மொழிந் திடுமெனக்கேட்பேன், ஆசையற்றதா யிருந்திடிலுழைத்

திட வதிசயங்கொள்வேனுன், நேசமுற்றதிற் பத்தியே யுறைத்திடில் நிலைத்திடுமையாவே. (எஅ)

குரு சொல்லுதல்.

அங்கசுத்தியு மாலையந்தொழுவதுஞ் சரியையென் றறைவார்கள், மங்களத்துட னட்டமாசித்தியும் வரை யுஞ்சக்கரபூசை, பொங்கமானது கிரியையாம்வாயுவை பிரண்டிடாதிழுத்திட்டு, தங்கிநின்றதோர் யோகமென்றி தனையே சாற்றிடுமறைதானே. (எகூ)

ஞானமேதெனக் கேட்டிடின்தத்துவ நானெனவு ணர்ந்திந்த, ஊனைநானென வுரைத்ததையகன்று பின் னொழிவறத்தனைக்கண்டு, மானம்வெட்கமுந் துக்கமுங் கவலையும் வஞ்சனைதான்போக்கி, யீனமற்றுநான் சிவமெ னத்துணிந்தது மிழுந்ததுமுடிவாமே. (அ௦)

ஜீவன்கேட்க குருசொல்லுதல்.

இந்தநாவினி லின்பமுற்றிருக்கையி லிச்சடம்விழு ந்திட்டால், தொந்தமானதோர் பலனென்னதெரிந்திடச் சொல்லுவாய்குருமூர்த்தி, சொந்தமாகவே கேள்மக னேயதன் சுகமதையறிவிப்போம், தந்தனங்களாய் விடா மலேகேட்பது சரியென மகிழ்ந்தேனே. (அக)

சரியையென்பது குறைவறச்செய்துமே தன்கடம் விழுந்திட்டால், கிரியைசெய்யவே யெடுத்திடுங்கடமது கிரியையுமுடிந்தேகில், உரிசையாகிய யோகமேசெய்யவு

முடலெடுத்துழைக்குங்காண், பரிகொள்யோகமு முற்ற வுமுடிந்துடற் பாரினிலுருவாமே. (அஉ)

ஞானமேபெற வெடுத்திடுமெவ்வுடல் நழுகிடாதுணைத்திட்டாம், லீனமாகிய செனனமும்போக்கிடுமீசனேதாஞகி, வானமுற்றதோர் சச்சிதானந்தமாய் வாக்குனைக் கெட்டாத, மோனமுற்றுதா னெங்குமாய்நிறைந்தது முத்தியென்றுணர்வாயே. (அ௩)

ஜீவன் சொல்லுதல்.

அப்பனேயெனை யடிமையாக்கொண்டவோ ரழகுள்ளகுருமூர்த்தி, தப்பவேகெதி வேறெனக்கில்லைநின் ருளதுகெதியென்றேன், ஒப்பவேசிவ ஞானமுமுணர்த்திடிலுகந்ததிலூன்றிக்கொண், டிப்பவேபர வீடதிலேகுவனீசனேயருள்வாயே.

குரு சொல்லுதல்.

வேறு.

தத்துவமேயுடல் தானெனுமானது தன்னையறிந்திடுநீ, சித்ததுவாயபி ராணனிரானதில் திரண்டதைக்கண்டிடுநீ, கற்றுமேகாணுக் கண்மணியானதை கண்டுதெளிந்திடுநீ, முற்றுசிவானந்த போதகமானது முத்தியுமிதுதானே.

வேறு.

அறிவுபோ தகமென்ற நூலைப்பாரு
அதற்குமுன்னே உடலறியும் விளக்கம்பாரு

பிறிவின்றி மேவின்றி மறைப்புமின்றிப்
பேரின்ப வமுதமழை பெய்தநூல்தான்
நெறிகொண்ட வந்நூலை யிசைந்துபாரு
நிலைக்கவே யப்படியே தீக்ஷைவைப்போம்
பொறிவிட்டு சபைபுகுவாய் பிக்கோயில்லை [ள்ளே.
பெரும்பொருளைக் கைக்கொண்டு பிழைத்துக்கொ

ஜீவன்சொல்லுதல்.

அப்படியே போதிக்க முத்திபெற்றேன்
அரியயனுங் காணாத வடிவுங்கண்டேன்
தப்பியே யிளைக்காமற் பிழைத்துக்கொண்டேன்
சஞ்சலத்தை யிழந்துநான் சுகத்தைப்பெற்றேன்
ஒப்புவமை சொல்லவொரு வரையுங்காணேன்
உனைப்போலே தெளிவுரைக்குங் குருவுங்காணேன்
செப்பவே நாவிழந்தேன் பரமானந்தத்
தீவிலே சேர்ந்திட்டேன் வாழ்ந்திட்டேனே. (௮௭)

ஞானியென்ற பெயர்களையே கண்டுகொள்ள
நல்லதொரு கண்பெற்றேன் பேசவென்று
வீனமறச் சொற்கற்றேன் சிரவணத்தால்
ஏகாந்த பரகவன மெய்தலானேன்
மானமற்ற வடியருட னாசைகொண்டேன்
மருவுமுடல் குருவுக்கே வணங்கிப்பெற்றேன்
தானமுற்றேன் சிவானந்தந் தனிலேநின்றேன்
சச்சிதா நந்தனென்றே தழைத்திட்டேனே. (௮௮)

வாழ்வுமுதற் சம்பத்தை மதித்திடாமல்
மலைமேலே யேறினதோர் பறவையானேன்
தாழ்வுகளா யுலகோர்சொல் நிந்தையெல்லாம்
சகாயமென்றே யெண்ணிச்சந் தோஷமானேன்
வீழ்வுதரு நரகிலுள்ள மாண்பர்க்கெல்லாம்
வீழாம லேமனிதர் மேலுமானேன்
ஏழுலகும் மேலேழும் நானேயானேன்
ஏகாந்தத் தீவினிலே யிறங்கினேனே. (அகூ)

குரு சொல்லுதல்.

மைந்தனே யுனைப்போல வோடிமெள்ள
வாதனையே தீர்ந்துமதி மயங்கிடாமல்
பந்தமறுத் தேபின்பு குருவைத்தேடி
பரமாகி வாழ்ந்தவர்க ளுண்டோவப்பா
சிந்தையற்ற பெரியோரை வணங்கிக்கொள்ளு
சிவஞானி தன்னுடனே நேசஞ்செய்தே
எந்தனையே பெற்றவனே யப்பாவப்பா
வெடுத்தணைத்தே யம்பரத்தி லிருப்போம்நாமே. ()

ஜீவன் சொல்லுதல்.

வெண்பா.

மறந்தேனோர்வார்த்தை மகிழ்ஞானமூர்த்தி
அறந்தேனினித்தெரியச் சொல்வாய்-சிறந்திலகு

பத்திசெய்வோருக்குப் பலனேதகைக்கெடுக்கும்
குத்திரருக்கென்ன குணம். (கூக)

தரு சொல்லுதல்.

விருத்தம்.

எண்ணிலாத்தவங்க ளியாகங்கள் செயினு மீஸ்வர விஷ்ணுவா லயங்கள், பண்ணுலாக்கவிதை பாடினுமனே கம் பாரினில்வரும்பலனேது, கண்ணுலாவியநற் சுருதி மெய்ப்பொருளைக் கண்டரனடியாருக், குண்ணலாமென வமுதளித்தவனடைபல னுரைக்கவுமுடியாதே. (கூஉ)

வேதமாகம சாத்திரபுராணங்கள் விரிந்தநூலறிந்தி டாவிந்து, நாதமேயுரு வாமத்விதானந்த ஞானமேபெற் றிடவேண்டின், ஓதவல்லவர் சத்துச்சித்தானந்த முற்ற நல்லடியோர்க்குப், பாதபூஜைக ளடங்கலுஞ்செய்தவர் பலனுரைக்கடங்காதே. (கூங)

கலித்துறை.

அன்னமளிப்பாரைக் கலைப்பாருமிந்த வவனிமிசை
பின்னலவர்க்குப் புரிவார்நினைப்பா ரிகழ்ந்திடுவார்
மன்னவராயிருந் தேமறிப்பாரையு மறலியினி
யென்னென்னவேதனை செய்வான்முடிவி லியம்பரிதே.()

சிவனருள்பெற்றுயர் மேலோர்தமக்குஞ் சிவனையு ன்னித், தவஞ்செயு மன்பர்க்குஞ் சிவவேடம்பூண்ட தன்

னியர்க்கு, முவந்தேபணிபுரி வார்மேலுக ருண்மையதாய்,
அவஞ்செய்தவனை யிகழ்வோரடைவ ரருநரகே. (கூரு)

பெரியோர்க்குத்தொண்டு செய்வாரைத் தடுத்திடும் பேதையரும், சரியாநடுநிலை சார்ந்தவர்க்கல்லல் சமைப்பவரும், பரிவானதீட்சை கொண்டோரை மறிக்கும் பாதகரும், எரிவாய்நரகத் தெண்ணிற்றுயரி லிருப்பரொன்றும்.

வெண்பா.

இந்நூலைப்பார்ப்போர் எடுப்போர்படிப்போர்
நன்னூலெனமனதி னாடுவோர்-பொன்னூற்
படியேறித்தாண்டிப் பவசாகரத்தைக்
கடவுளக்குமுன்னிற்பர் காண். (கூஎ)

சந்தேகமாதிகளைச் சாராமலேயகற்றிப்
பந்தபாசங்களைப் பாழாக்கும் - இந்தநூல்
எந்தநாளும்மழியா யேகாந்தவீடதனைச்
சொந்தமாக்குமெனவே சொல். (கூஅ)

கலிவிருத்தம்.

அரனங்கிரிவாழி யம்பிகைதாள்வாழி
பெருமான்பதம்வாழி பிள்ளைசரணம்வாழி
பரமேட்டியடிவாழி பாரதிபாதம்வாழி
கரிமுகன்கழல்வாழி கந்தன்திருவடிவாழியே. (கூகூ)

கொச்சகம்.

வான்வாழிவானையளி மாதவரும்வாழி
கோன்வாழிகுருவாழி குவலயத்தோர்வாழி
ஆன்வாழியமரர்முத லிருடிசித்தர்வாழி
நான்நீயெனகமற்ற நாதாக்கள்வாழி. (௧௦௦)

சிவானந்தபோதம் - முற்றிற்று.

சற்குருவே துணை.